**திங்கள் | கார்த்திகை 1** 📖 மாலை வாசகம் – மத்தேயு 18:36

# தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் யார்?

மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்த வாலிபனொருவன், தன் சிறுவயது முதல் நல்வழியிலே நடக்கும் சன்மார்க்கனாக வாழ்ந்து வந்தான். அப்படியிருந்தும் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளுவேன் என்ற நிச்சயம் அவன் உள்ளத்திலே இல்லாதபடியினால், ஒரு சமயம், அவன் ஆண்டவராகிய இயேசுனிடத்தில் வந்து, நித்திய ஜீவனை அடையும்படி நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். சற்று இங்கே தரித்திருந்து சிந்தனை செய்யுங்கள். தேவனுடைய ஆசீர்வாதம் என்பது என்ன? ஒரு மனிதன் திரளான ஐசுவரியத்துடன் வாழ்ந்து முடிவிலே நித்திய ஆக்கினைக்குள் பிரவேசிப்பது தேவனுடைய ஆசீர்வாதமாகுமா? அல்லது உள்ளது போதும் என்ற மனதுடன் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது தேவனுடைய ஆசீர்வாதமாகுமா? வாக் களிக்கப்பட்ட மீட்பராகிய இயேசு இந்த உலகத்திற்கு வரும் முன்னதாகவே, இந்த உலகிலே அநேக ஐசுவரியவான்கள் இருந்தார்கள். அவர் இந்த பூமியிலே வந்த பின்பும் அநேக ஐசுவரியவான்கள் வாழ்ந்தார்கள். இன்றும் அவ்வண்ணமாகவே அநேக ஐசுவரியமுள்ள மனிதர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் யாவரும் தேவனாலே ஆசீர்வ திக்கப்பட்டவர்களா? ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திற்கு வந்ததன் காரணம் என்ன? ஒருவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை கொடுக்கும்படியாகவே மீட்பராகிய இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். ஆனால் இன்று சில மனிதர்கள், நீங்கள் ஆண்டவர் இயேசுவிடம் வாருங்கள், அவர் உங்களை ஆசீர்வதிப்பார் என்று இந்த பூமிக்குரிய செல்வங்களை மையமாக வைத்து அழைக்கின்றார்கள். இவர்களுடைய இருதயம் இந்த பூமிக்குரியவைகளால் நிறைந்திருக்கின்றது. (மத்தேயு 6:21). இயேசுவை தேடி வந்த அந்த பணக்கார வாலிபனிடத்தில் இந்த பூமிக்குரிய செல்வம் மிகையாக இருந்தும், தன் வெறுமையை கண்டு நித்திய ஜீவனை கொடுக்கும் இயேசுவிடத்தில் வந்தான். ஆனால் அவருடைய சத்தத்தை கேட்டு அவரை பின்பற்ற மனதில்லாதவனாய் போய்விட்டான். ஒருவன் நித்திய ஜீவனில் பிரவேசிப்பதே தேவனுடைய ஆசீர்வாதமாக இருக்கின்றது. இந்த உலக ஆஸ்திகளால் நிறைந்திருப்பது ஒருவனுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்காது. மேய்ப்பனின் சத்தத்தை கேட்டு அவன் பின் செல்கின்ற ஆடுகளைப் போல, நல்ல மேய்ப்ப னாகிய இயேசுவின் சத்தத்தைக் கேட்டு அவருக்கு பின்னாக செல்கின்ற வர்களே நித்திய ஜீவனை அடைந்து கொள்கின்றார்கள்.

**யோவான் 10:4**

**ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது.**

**ஜெபம்:** ஆசீர்வதிக்கும் தேவனே, அழிந்து போகின்ற இந்த உலக ஆஸ்திகளுக்காக மட்டும் நான் உம்மை தேடாதபடிக்கு, அழியாத நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும்படி உம் வார்த்தையின் வழியில் வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தடைகளை அகற்றிவிங்டுகள்

> **மத்தேயு 6:24**
>
> தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.

ஒரு கிராமத்தை நோக்கி பெரிதான புயல்காற்று வரப்போகின்றது என்பதை அறிந்து கொண்ட அதிகாரி ஒருவன், அந்த கிராம மக்களை நோக்கி, நீங்கள் துரிதமாக ஆயத்தப்படுங்கள். நீங்கள் உயிர் பிழைக்கும்படிக்கு, உங்கள் பிரயாணம் ஸ்தம்பிதமாகாதபடிக்கும் உங்கள் வீட்டிலிலுக்கும் எந்தப் பொருட்களையும் எடுத்துக் கொள்ளாமல், என் பின்னே வாருங்கள் நான் உங்களை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்வேன் என்று கூறினான். அந்த கிராமத்தின் மக்கள் அந்த அதிகாரி கூறியபடி துரிதமாகப் புறப்பட்டு அவன் பின்னே சென்றார்கள். ஆனால் ஒரு மனிதனானவனோ, தன் வீட்டிலிருந்து சில பொருட்களை விட்டுவிட மனதில்லாதவனாக, தன் மாட்டு வண்டியை எடுத்து, அதன் மேலே வீட்டிலிருந்த அநேக பொதிகளை ஏற்றிக் கொண்டான். பொதிகளின் பாரம் அதிகமாக இருந்ததால், அந்த வண்டி மிக மெதுவாக சென்று கொண்டிருந்தது. அந்த அதிகாரியை பின் தொடர்ந்த மற்றவர்கள், வேகமாக அந்த கிராமத்தை கடந்து சென்று விட்டார்கள். பொதிகளை ஏற்றிச் சென்ற மனிதனானவன், பாதி வழியிலே சென்ற போது, புயல் காற்று வீச ஆரம்பித்தது. தான் புயலிலே மாட்டிக் கொண்டேன் என்று உணர்ந்து கொண்ட அந்த மனிதானனவன், தன் பொதிகளை விட்டுவிட்டு, ஓட ஆரம்பித்தான். ஆனாலும் அவனோ புயலிலே அகப்பட்டு கொண்டான். பிரியமானவர்களே, அந்த மனிதனானவன், தனக்கு முன்னிருக்கும் கண்ணியை குறித்து உணராதபடிக்கு, அவனிடமிருந்த பொருட்கள் அவனை மிக அதிகமாக கவர்ந்து கொண்டது. இந்த உலகத்திலே உச்சிதமானவைகள் என்று கருதப்படும் எந்த பொருளோடும், புகழோடும், அந்தஸ்தோடும் நாம் பரலோகத்திற்கு செல்ல முடியாது. ஒருவேளை இவைகள் உங்களிடம் இருந்தால், அவைகளை இந்த பூமிக்குரியதாகவே இருக்கட்டும், இவைகளை உங்கள் இருதயத்திலிருந்து இறக்கி வைத்துவிடுங்கள். இவைகளின் மேல் தங்கள் நம்பிக்கையை வைக்கின்றவர்களுக்கு இவைகள் கண்ணியாக மாறிவிடும். இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான் தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. எனவே பரலோகத்திற்குரிய பொக்கிஷங்களால் உங்கள் இருதயத்தை நிறைத்துக் கொள்ளுங்கள்.

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று அழைத்த தேவனே, இந்த உலகத்தினால் உண்டானவைகள் எவையும் என்னுடைய ஜீவ ஓட்டத்திற்கு தடையாக இருக்காதபடிக்கு என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பாரஞ்சுமக்கிறவர்களே!

மனிதர்கள் தங்களுடைய வாழ்விலே சுமக்கும் மனப் பாரங்கள் என்ன? ஒரு சமயம் ஒரு மனிதனானவன், சிறு வயது முதல், ஊமையான ஒரு அசுத்த ஆவி பிடித்த தன் மகனை ஆண்டவர் இயேசுவினிடத்தில் கொண்டு வந்தான். அந்த அசுத்த ஆவியானது, அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனை அலைக்கழிக்கிறது. அப்பொழுது அவன் நுரை தள்ளி, பல்லைக்கடித்து, சோர்ந்துபோகிறான். இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று, என்று தன் மகனானவன் படும் வேதனையை ஆண்டவர் இயேசுவினிடத்தில் கூறினான். அந்த அசுத்த ஆவி பிடித்தவன் ஆண்டவர் இயேசுவை கண்டவுடனே, அந்த ஆவி அவனை அலைக்கழித்தது. அவன் தரையிலே விழுந்து, நுரைதள்ளிப் புரண்டான். ஆண்டவர் இயேசு அந்த அசுத்த ஆவியை நோக்கி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதை அதட்டினார். அப்பொழுது அது சத்தமிட்டு, அவனை மிகவும் அலைக்கழித்துப் புறப்பட்டுப்போயிற்று. செத்துப்போனான் என்று அநேகர் சொல்லத்தக்கதாகச் அவன் செத்தவனைப்போல கிடந்தான். இயேசு அவன் கையைப்பிடித்து, அவனைத் தூக்கினார் உடனே அவன் எழுந்திருந்தான். அந்தத் தகப்பனானவரோ, தன் மகன் படும் வேதனையினால் மனம் பாரப்பட்டவனாக இருந்தான். அந்த மகனாவன், பிசாசின் பிடியில் அகப்பட்டு கொடிய பாரத்தை சுமந்து வந்தான். இப்படியாக சில மனிதர்கள், போதைவஸ்து, மதுபானம், மோகபாவம் போன்ற அடிமைத்தனங்களில் வாழ்கின்றார்கள். வேறு சிலர் களவும், பொய்யும் நிறைந்த வாழ்க்கை வாழ்கின்றார்கள். இன்னும் சிலர் வேறு கொடிதான பாவ இச்சைகளிலும் கட்டுகளிலும் உழன்று தவிக்கின்றார்கள். இப்படியாக மனிதர்கள் தங்கள் வாழ்விலே விடுதலையடைய வழி தெரியாமல், பல பொதிகளை சுமந்து வேதனைப் படுகின்றார்கள். அடிமைத்தனங்களினாலே தற்காலினமாக விடுதலை யையும் இன்பத்தையும் நாடுகின்றார்கள். இப்படியாக வருதப்பட்டு பாரங்கள் சுமந்து வாழும் மனிதர்களுக்கு விடுதலை கொடுக்கும்படிக்கு ஆண்டவர் இயேசு அழைக்கின்றார். இன்று உங்கள் வாழ்வை அவரிடம் கொடுத்தால், அவர் எல்லா பாரங்களிலுமிருந்து விடுதலை தருவார்.

**மத்தேயு 11:28**

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

**ஜெபம்:** விடுதலை தரும் தேவனே, என்னுடைய வாழ்க்கையிலே இருக்கின்ற வேண்டாத பெலவீனத்தை நான் முற்றும் ஜெயங்கொள்ளும் படிக்கு என் வாழ்வை இன்று நான் உம்மிடம் ஒப்படைக்கின்றேன்.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்வை அழுத்தும் சுமைகள்

ஓட்டப் பந்தையப் போட்டிற்கு தாயார் செய்து கொண்டு வந்த இளைஞனானவன், ஓட்டப் பந்தையப் போட்டியின் நாளிலே, தான் அணிந்ருக்கும் சீருடை, காலணி முதலானவைகளைத் தெரிந்து கொள்ளும் போது, அவை தன் ஓட்ட பந்தையப் போட்டிக்கு தடையாக இல்லாதபடிக்கு, பாரமற்றவைகளையே தெரிந்து கொள்வான். அவன் தன் சரீரத்தின் மேலும், தன் மனதினிலும் எந்த பாரங்களையும் ஏற்றுக் கொள்ளமாட்டான்.

**எபிரெயர் 12:1**

பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு,

நாமும் பரலோகத்தை நோக்கி ஜீவ ஓட்டத்திலே ஓடிக் கொண்டிருக்கின்றோம். ஜீவ ஓட்டம் என்பது என்ன? நித்திய ஜீவனை இலக்காக வைத்து அதை பெற்றுக் கொள்ளும்படிக்கு அதை நோக்கி வாழும் வாழ்க்கை யாகும். இந்த ஜீவ ஓட்டத்திலே ஓடிக் கொண்டிருப்பவர்களை நாம் விசுவாசிகள் என்று அழைக்கின்றோம். ஏன் அவர்களை விசுவாசிகள் என்று அழைக்கின்றோம்? இவர்கள் ஆண்டவர் இயேசு வழியாக மட்டுமே பாவமன்னி உண்டு என்பதை விசுவாசித்து, தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, இயேசு வழியாகவே மட்டுமே நித்திய ஜீவன் உண்டு என்று ஏற்றுக் கொண்டு, அவருடைய வார்த்தைகளை விசுவாசித்து, அந்த வார்த்தைகளின்படி வாழ்கின்றார்கள். அந்த ஜீவ ஓட்டத்திலே ஓடிக் கொண்டிருக்கும் விசுவாசிகளாகிய நாம், நம்மை அழுத்தும் இந்த உலகத்தினால் உண்டாகும் சுமைகளை நம்மை விட்டு தள்ளிவிட வேண்டும். நம்முடைய ஜீவ ஓட்டத்திற்கு தடையான சுமைகள் எவை என்பதை நாம் இனங் கண்டு கொள்ள வேண்டும். இந்த சுமைகள் என்ன? நிச்சயமாக பாவங்கள் யாவும் நம்முடைய ஜீவ ஓட்டத்திற்கு தடையானவைகள். அதுமட்டுமல்ல, இந்த உலகத்தின் தேவைகளைக் குறித்த கவலை, அழிந்து போகும் உலக பொட்களைக் குறித்த ஆசை, மனிதர்களுக்கு சுமையாகவும், அழுத்தும் பாரங்களாகவும் மாறிவிடுகின்றது. ஓட்டப் பந்தைய போட்டியிலே வெற்றி பெற வேண்டும் என்று ஓடுபவனின், முழு நோக்கமும் பந்தைய பரிசுப் பொருளின்மேல் இருக் கும். அவன் வாழ்க்கையிலே அந்த பந்தையப் பொருளை அடைவதற்கு தடையாக இருக்கும் எல்லாவற்றையும் அவன் தனக்கு சுமையாவே கருதி அதை விட்டுவிடுவான். அதுபோலவே, நாமும், நம்முடைய பந்தைய பொருளாகிய நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வதற்கு தடையாக இருக்கும் யாவையும் தள்ளிவிட்டு விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்தி ருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்

**ஜெபம்:** பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக என்னை அழைத்த தேவனே, அந்த பந்தையப் பொருளை நான் பெற்றுக் கொள்ளும்படிக்கு, தடைகளை அகற்றி முன்னேற எனக்கு பெலன் தந்து நடத்துவீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தரையே நினைத்துக் கொள்

பாடசாலைகயிலே உயர்தரக் கல்வியை கற்றுக் கொண்டிருக்கும் மாண வனாவன், தான் படிக்கும் சில பாடங்களில் தனக்கு உதவி தேவை யெனவும், தன் நண்பர்கள் மாலை நேர வகுப்புக்கு செல்கின்றார்கள், அவர்களோடு தானும் செல்ல விரும்புகின்றேன் என்று தன் பெற்றோரிடம் கேட்டுக் கொண்டான். அவர்களும், மாலை நேர வகுப்புக ளுக்கு வேண்டிய கட்டணத்தை அவனிடம் கொடுத்து, அவனை மாலை வகுப்புகளில் பதிவு செய்து கொண்டார்கள். சில கிழ மைகள் சென்ற பின்னர், அவனு டைய நண்பர், புதிதாக வந்திரு க்கும் திரைப்படத்தை பார்க்க வேண்டும் என்று, மாலை வகுப்புக்குச் செல்லாமல், திரைப்பட அரங்கிற்கு சென்றார்கள். அந்த மாணவ னானவனும், அவர்களோடு சேர்ந்து, மாலை வகுப்பிற்கு செல்லாமல், திரைப்படம் பார்க்கச் சென்றான். பெற்றோர் கஷ்டப்பட்டு உழைத்து, மாலை வகுப்புக்கு என்று கொடுத்த பணத்தை, திரைபடம் பார்ப்பதற்கு நுழைவுச் சீட்டிற்காகவும், சிற்றுண்டிகளுக்காவும் செலவு செய்தான். ஆரம்பத்திலே சற்று தயக்கத்துடன், புதிய திரைப்படத்தை பார்க்கச் சென்றவன், பின்னர் எந்த சலனமுமின்றி அதை தன் வழக்க மாக்கிக் கொண்டான். பிரியமானவர்களே, தன் நண்பர்களின் வழிக ளுக்கு இடங் கொடுத்ததால், அந்த மாணவனானவன் மாலை வகுப் புக்குச் சென்ற முதன்மையான நோக்கத்தை மறந்து தன் ஆசை இச்சை களுக்கு ஒருமுறை இடங்கொடுத்தான். அதனால் அவன் தன் பெற்றோ ருக்கும் நம்பிக்கை துரோகம் செய்வதற்கு துணிகரமுள்ளவனானான். அதுபோலவே, நித்திய ஜீவனுக்கென்று அழைப்பை பெற்ற நீங்கள், உங்களுடைய பிரதானமான நோக்கத்தை மறந்து போய் விடக கூடாது. நீங்கள் செய்து வரும் நற்கிரியைகளை செய்யாதபடிக்கு அவைகளை விமர்சிப்பவர்களை குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். ஒரு முறை மட்டும் சபை கூடிவருதலை விட்டுவிட்டால் என்ன? ஒரு நாளை க்கு ஜெபக் கூட்டத்தில் கலந்து கொள்ளாவிட்டால் என்ன? என்று உங் கள் வழிகளைக் குறித்து நியாயம் பேசுகின்றவர்க ளின் வழிகளுக்கு கொஞ்சமும் இடங்கொடுக்காதிருங்கள். அந்த வழிகளால் அழுத்தும் சுமைகளை உங்கள்மேல் ஏற்றி கொள்வீர்கள். நாளடைவிலே உங்கள் இருதயம் பாவத்தைக் குறித்த உணர்வற்றுப் போய்விடும். எனவே உங்கள் வழிகளிளெல்லாம் கர்த்தரையே நினை த்துக் கொள்ளுங்கள். அவர் தடைகளை அகற்றிவிட உதவி செய்வார்.

**நீதிமொழிகள் 3:6**

உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ் வைப்படுத்துவார்.

**ஜெபம்:** மேலான நோக்கத்திற்காக என்னை அழைத்த தேவனே, உம்முடைய வார்த்தைக்கு முரணான மோசம் போக்கும் ஆலோசனை களை உணர்ந்தறிந்து அவைகளை விட்டு விலகும்படி எனக்கு பெலன் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உலகத்தின் போக்குகள்

ஒரு சிறுமியானவள், ஆலயத்திலே மிகவும் இனிமையான குரலிலே, தெய்வீக கானங்களை பாடி வந்தாள். அவள் ஆலயத்திலே பாடும் நாட்களிலே, அவளுடைய குரலை கேட்கும்படி பலர் ஆவலாக இருந்தார்கள். அவள் அவளுடைய வாலிப பருவத்தை அடைந்ததும், உலக பாடல்களை வெளியிடும் ஸ்தாபனமொன்று, அவளை தங்களுடன் இணைந்து கொள்ளும்படி அழைத்தார்கள். மேலும் அவர்கள் கூறுகையில், வருகின்ற கிறிஸ்மஸ் நாட்களிலே தாங்கள் ஒரு இசைத்தட்டை வெளியிட இருப்பதாகவும், அவள் பாடும் கிறிஸ்மஸ் பாடல்கள் ஒவ்வொன்றிற்கும், பெருந்தொகையான பணத்தை கொடுப்போம் என்றும் ஒப்பந்தம் செய்து கொண்டார் கள். அடுத்த ஆண்டிலே, அந்த ஸ்தாபனத்தார் அவளை நோக்கி: நீ உலக பாடல்களை பாடுவதில்லை, ஆனால், ஒரு நல்ல உலக பாடல் இருக்கின்றது. அதன் வரிகளிலே ஒரு குறைவும் இல்லை. அதை நீ பாடினால், உனக்கு ஐந்து மடங்கான பணத்தை கொடுப்போம் என்றார்கள். ஆசீர்வாதத்தின் மேல் ஆசீர்வாதம் தனக்கு கிடைக்கின்றது என்று அவள் அதற்கு சம்மதித்தாள். ஆண்டுகள் கடந்து செல்லும் போது, அவள் உலக பாடல்களை பாடும் பெரும் பாடகியாகிவிட்டாள். பெருந்தொகையான பணம், பெயரும், புகழும் அவளுக்கு கிடைத்தது. இந்த உலக ஐசுவரியங்களோடு ஒட்டியிருக்கும் ஐசுவரியத்தின் பாவங்களும் அவளை பற்றிக் கொண்டது. மாசற்றவளாக தெய்வீககானங்களை பாடி வந்த அந்த சிறுமி இன்று துன்மார்க்கமான பாவ வாழ்க்கைக்கு அடிமையானாள். பிரியமானவர்களே, மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு அதின் முடிவோ மரண வழிகள். அந்த சிறுமிக்கு வந்த அழைப்பைப் போல இன்று கல்வித் துறையிலும், விளையாட்டு துறைகளிலும், பல் வேறுபட்ட வேலைகளிலுமிருந்து மனிதர்கள் பல அழைப்புக்களை பெற்றுக் கொள்கின்றார்கள். ஆரம்பத்திலே அவை ஆசீர்வாதத்தை தருவது போல காட்சியளிக்கும். மற்றவர்களோடு அதைப் பற்றி பேசும் போது பெரும் கனத்தையும் கௌரவத்தையும் கொடுக்கும். ஆனால் அவைகள் நம்முடைய பரலோக பிரயாணத்திற்கு கண்ணியாகவும், சுமைகளாகவும் மாறிவிடாதபடிக்கு நாம் எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள நம்மைக் குறித்த, தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று நாமே பகுத்தறியத்தறிய வேண்டும்.

**ரோமர் 12:2**

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்,

**ஜெபம்:** பரலோக தேவனே, நாங்கள் எங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் உமக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவும், இந்த உலகத்தினால் உண்டாகும் அழைப்புக்களை பகுத்தறியவும் ஞானமுள்ள இருதயத்தை தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கசப்பான வேர்

ஒரு மனிதனானவன், தன் வீட்டிற்கு பின்புறத்திலே நன்றாக பராமரிக்கப்பட்டு, அழகாக காட்சியளிக்கும் தோட்டத்தின் நடுவே ஒரு களை முளைத்தெழும்புவதை அவதானித்தான். உடனடியாக சென்று அந்த களையை பிடுங்கிவிட்டான். சில கிழமைகளுக்குப் பின் அந்த களை திரும்ப முளைத்திருப்பதைக் கண்டு கொண்டான். மறுபடியும் சென்று அந்த இடத்தை சற்று ஆழமாகத் தோண்டி பார்த்தபோது, அந்தக் களையானது எவ்வளவு ஆழமாக வேர்விட்டிருககினறது என்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். வேர்விட்ட அந்த களையை பராமுகமாக விட்டுவிட்டால், அது சீக்கிரமாக வளர்ந்து பூத்து, அதன் விதைகளை பரப்பி, அந்த தோட்டம் முழுவதும் களைகளை வளரச் செய்யும். மனிதர்களுடைய இருதயத்திலும் மற்றய மனிதர்களைக் குறித்த கசப்பு, களையைப் போலவே வேர்விட ஆரம்பிக்கின்றது. பொதுவாக இந்த கசப்பானது மனிதர்களுடைய மனதிலே மறைந்திருப்பதால், இதன் பாதகமான விளைவுகள் உடனடியாக வெளியே தெரியப் போவதில்லை. குறித்த காலத்திலே அது, அதன் கனியை கொடுக்கும் வரைக்கும் இருதயத்திற்குள்ளே ஆழமாக வேர் விட்டு வளர்ந்து கொண்டே இருக்கும். மதுபானம் போதைவஸ்துக்களுக்கு அடிமையானவர்கள் எப்படி அதை உட்கொள்ளும்வரை திருப்தியடையாதிருக்கின்றார்களோ, கசப்பை தங்கள் இருதயங்களில் வைத்திருக்கின்றவர்களும் அவ்வண்ணமாகவே இருக்கின்றார்கள். அந்தக் கசப்பானது பழிவாங்குதலை நோக்கி சந்தர்ப்பத்திற்காக காத்திருக்கும். மனதிலே கசப்பு உண்டாவதற்கு தகுந்த காரணங்கள் இருக்கலாம். இந்த உலகத்தின் போக்கில் வாழ்கின்றவர்கள் அதை நியாயமானது என்று கூறலாம். ஆனால் தாங்கள் தீமைக்கு தீமை செய்ய வேண்டும் அல்லது கேடு செய்தவனுக்கு கேடு நடக்க வெண்டும் என்று காத்திருப்பதால், மனிதர்கள் தங்கள் சொந்த வாழ்வின் சமாதானத்தை தாங்களே கெடுத்துக் கொள்கின்றார்கள். களைகள் வளர்ந்து பூத்து, அவை விதைகளை பரப்பி வளர்வதுபோல, கசப்பை குறித்த தியானமானது மனதிலே அனுதினமும் வளர்ந்து கொண்டேயிருக்கும். பகை, வன்மம், மூர்க்கம், வாக்குவாதம், சண்டை, கலகம் போன்ற பெரும் பாதகமான விளைவுகளை கசப்பானது வெளியே காண்பிக்கும். இவைகளும் மனிதர்கள் மனதில் மறைந்திருக்கும் தேவையற்ற பாரச்சுமைகளே.

**எபிரெயர் 12:15**

யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்,

**ஜெபம்:** கிருபையைப் பொழியும் தேவனே, பரலோக பிரயாணத்தை தடைசெய்யும், உள்ளத்திலே மறைந்திருக்கும் தேவையற்ற பாரச்சுமைகளை நான் இனங்கண்டு அகற்றிவிட உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருதயத்தை ஆளுகை செய்வது எது?

"அவன் பல ஆண்டுகளுக்கு முன்பாக என் குடும்பத்திற்கு அநியாயம் செய்தான், அதனால் தான் இப்போது அவனுக்கு இப்படி நடந்திருக்கின்றது" என்று ஒரு மனிதனானவன், ஒரு போதகரிடம் கூறினான். அந்தப் போதகரோ அவனை நோக்கி: மகனே, ஆண்டுகள் இன்னும் முடிந்து போகவில்லையே? இன்று அவனுடைய நிலைமை இப்படியாக இருக்கின்றது. நாளை உனக்கு என்ன நடக்கும் என்பதும் உனக்குத் தெரியாதே? வரும் நாட்களிலே உன் பிள்ளைகளின் நிலைமை என்னவாகும் என்பதும் உனக்குத் தெரியாதே? மகனே, அநேக ஆண்டுகளுக்கு முன்னதாக அவன் செய்த அநியாயத்தை நீ தூக்கி சுமந்து கொண்டு வந்தாய் இது உன் தேவ சமானதானத்தை இழக்க வைத்திருக்குமே என்று கேட்டார். இந்த உலகத்திலே ஒருவர் எங்களுக்கு அநியாயம் செய்யும் போது, அவன் என்னிடத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற கோரிக்கையை அல்லது நிபந்தனைகளை நாம் வைக்கின்றோம். அவன் அப்படி மன்னிப்பு கேட்டால் அவனுக்கு மன்னிப்பு உண்டு என்று திட்டமாக கூறிவிடுகின்றோம். ஆனால் எனக் குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். தன்னை தேவனுடைய பிள்ளை என்று அழைக்கும் ஒரு மனிதனானவன், உங்களுக்கு விரோதமாக குற்றம் செய்தால் அவன் மன்னிப்பை கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வேதம் அவனுக்கு அறிவுரை கூறுகின்றது. அவன் அப்படி செய்யாதிருந்தால், தேவ பிள்ளைகளாகிய நீங்கள் அவனைக் குறித்த கசப்பை உங்கள் உள்ளத்திலே வைத்திருப்பது உங்களுக்கு நன்மையாக இருக்குமோ? ஆண்டவரே தீமை செய்தவனுக்கு நான் தீமை செய்யும்படி நினைக்காமல், அவனை மன்னித்துவிட எனக்கு பெலன் தாரும் என்றும், கசப்பானது நம் உள்ளத்தில் தங்கியிருக்கவும் நாம் இடங் கொடுக்கக்கூடாது. அப்படி நீங்கள் இடங்கொடுக்கும்போது, தேவ சமாதானம் உங்கள் இருதயங்களை ஆளுகை செய்ய முடியாது. இன்னும் தேவையற்ற பாரங்களை நீங்கள் சுமக்கின்றவர்களாகவே இருப்பீர்கள். தேவ சமாதானம் உங்கள் உள்ளங்களையும் இல்லங்களையும் ஆண்டு கொள்ளும்படிக்கு பூரண சற்குணத்தின் கட்டாகிய தேவ அன்பை தரித்துக் கொள்ளுங்கள்.

**கொலோசெயர் 3:15**

தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது

**ஜெபம்**: என் அநியாயங்கள் எல்லாவற்றையும் மன்னித்த தேவனே, கிறிஸ்து எங்களுக்கு மன்னித்ததுபோல, நாங்களும் ஒருவருக்கொருவர் மன்னிப்பை தாராளமாக கொடுக்கும்படிக்காய் உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அறிக்கையும் தியானமும்

“எங்கள் கோபதாபங்கள் ஒரு பக்கமாக இருக்கட்டும், அவர்கள் துன்பமான நாட்களை கடக்கின்றார்கள். அவர்கள் என்னுடைய இரத்த உருத்தானவர்கள் எனவே நான் அவர்களுக்கு உதவி செய்ய வேண் டும்” என்று கூறிக் கொண்டு, கசப்பை இன்னமும் உள்ளத்தின் அடி ஆழத்தில் வைத்துக் கொண்டு, உதவி செய்யக் கூடிய ஆற்றல் மனித ர்களிடம் உண்டு. கிறிஸ்துவோடு நடப் பது என்பது ஒரு தனிப்பட்ட தீர்மா னம். பல தேவ செய்திகளை கேட்க லாம். பல தியானங்களை கேட்கலாம். ஆனால் நாளுக்கு நாள் என்னை ஆராய்ந்து சுயபரிசீலனை செய்து கொள்ளவதும் என்னுடைய சொந்த தீர்மானமே. சில வேளைகளிலே தேவ வசனங்களை கேட்கும் போது, என க்கு சொல்வதற்கு இவர் யார் என்றுகூட சில மனிதர்கள் சிந்திப்பது ண்டு. உங்கள் இருதயங்களிலே கசப்பு இருக்கின்றதா என்று எப்படி நீங்கள் உங்களை ஆராய்ந்து பார்க்கலாம்? ஒரு மனிதனுடைய இருத யத்திலே கசப்பு இருக்கின்தா என்று சுயபரிசீலனை செய்வதற்கு பின் வரும் கூற்றுக்கள் உங்களுக்கு உதவி செய்கின்றதாயிருக்கின்றது. 1. அவனை மன்னிப்பேன் ஆனால் அவன் செய்ததை மறக்க மாட்டேன் என்னும் அறிக்கை. அதாவது, எழுத்திலே மன்னிப்பை வழங்குவேன், ஆனால் என் உள்ளத்திலே கசப்பை வைத்திருப்பேன் என்று பொருள் படும். 2. அவன் என்னிடத்தில் கேள்வி கேட்டால், நான் அவனுடைய வாழ்க்கையில் நடந்த இன்னென்ன காரியங்களை கூறுவேன் என்று அவைகளை மனதிலே பட்டியல் படுத்தி வைத்திருப்பது. இது யுத்தம் செய்வதற்குரிய ஆயுதங்களை சேர்த்து வைத்திருப்பதற்கு சமமாயிரு க்கும். 3. வாழ்விலே நடந்தவைகளைளும் கடந்தவைகளையும் அதிக மாக மனதிலே தியானித்தல். இது ஒருவன் தினமும் உடற்பயிற்சி செய்து உடலை பெலனுள்ளதாக்குவது போல அவன் மனதை கடினப் படுத்திக் பழிவாங்கும் எண்ணத்தை பெலப்படுத்திக் கொள்வதைப் போல இருக்கும். 4. மன்னிப்புக் கேட்டால் மன்னிப்பு உண்டு என்ற மனப்பான்மையும் அறிக்கையும். இந்த மனநிலை யானது, பசியினால் வாடும் ஏழை பிச்சசை கேட்டால் கொடுப்பேன் இல்லாவிடில் கொடுக்க மாட்டேன் என்பதற்கு ஒத்திருக்கும். ஒருவேளை உங்களுக்கு தீமை செய்தவர்கள் சமாதானத்திற்கு உடன்படாவிட்டாலும், நீங்கள் அவர்ளை மன்னித்து, ஆசீர்வதித்து, அவர்களுக்காக ஜெபிக்கும் படியாக ஆண்ட வராகிய இயேசு கூறியிருக்கின்றார். மனித பெலத்தி னால் செய்ய முடி யாதவைகளை, செய்து முடிக்க தேவன் பெலன் தந்து நடத்துவார்.

**சங்கீதம் 19:14**

என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.

**ஜெபம்:** என் நினைவுகளை அறிந்த தேவனே, மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். குறைகள் குற்றங்களையல்ல, உம்முடைய வசனத்தையே தியானம் செய்ய எனக்கு கற்றுத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நற்கிரியைகளை செய்ய பெலன் தந்தவர்

நான் அவர்களுடைய முன்னேற்றத்திற்காக பாடுபட்டேன். என் வாழ்வில் பல சுகபோகங்களை தியாகம் செய்தேன். அவர்களுடைய தேவைகளுக்காக அநேகந்தரம் உபவாசித்து ஜெபித்தேன் ஆனால் அவர்களோ நன்றியற்றவர்களாக, எனக்கு துரோகம் செய்தார்கள். நான் அவர்களை வெறுக்கவில்லை ஆனால், என்னுடைய அகராதியிலே அவர்களுடைய கதை முடிந்து விட்டது என்று ஒரு மனிதனானவன் தன்னுடைய ஆதங்கத்தை தன் போதகரிடம் கூறிக் கொண்டான். மகனே, நீ செய்து வருகின்ற நற்கிரியைகளையும், உன்னுடைய அர்பணிப்பையும் நான் தனிப்பட்ட ரீதியிலே சாட்சி கொடுக்க தயாராக உள்ளேன். ஆனால் அந்த நற்கிரியைகளானது யாராலே உண்டானது? யாருடைய பெயராலே அதைச் செய்தாயோ, உன்னுடைய பெயராலே அதை செய்தாயோ? அல்லது இயேசுவின் நாமத்திலே அதைச்செய்தாயோ? உன் கிரியைகளை மற்றவர்கள் கண்டு பிதாவாகிய தேவனை ஸ்தோதரிக்கும்படியாய் செய்தாயா? அல்லது அவர்கள் உனக்கு நன்றியாய் இருக்க வேண்டுமென்று செய்தாயோ? இவ்வளவு தூரம் வந்திருக்கும் நீ, இன்னுமாய் ஆண்டவராகிய இயேசுவின் சாயலிலே வளர விரும்புகின்றாயா? அல்லது உன்னுடைய சுய ரூபத்தை மறுபடியும் உயிரடையச் செய்யப் போகின்றாயா? இவைகளை சிந்தித்து நீயே தீர்மானம் செய்து கொள் என்று போதகரானவர் தயவாக அவனுக்கு கூறினார். பிரியமானவர்களே, நம்மையும் தம்மைப்போல மாற்றும்படிக்கு, ஆண்டவராகிய இயேசு, தம்மைத் தாழ்த்தி அடிமையின் ரூபம் எடுத்தார். அவர் நமக்காக அசட்டைபண்ணப்பட்டு, புறக்கணிக்கபட்டவராய் பாடுகளை அநுபவித்தார். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். ஏன் இத்தனை பாடுகள்? ஏன் இத்தனை உபத்திரவங்கள்? நாமும் தம்மைப் போல இந்த உலகத்திலே வாழும்படிக்கு, தம்முடைய உயிரையே சிலுவையிலே தியாகம் செய்தார். நாம் செய்யும் தீமையின் நிமித்தம் அவர் நமக்கு நன்மை செய்வதை விட்டுவிடுபவர் அல்லர். அதுபோல, தேவனுக்கு சித்தமானால், நம்மை நற்கிரியை செய்யும்படி ஏற்படுத்தியவரைப் போல நாமும் நன்மை செய்து பாடநுப்பதையே கற்றுக் கொள்வோமாக.

**1 பேதுரு 3:17**

**தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.**

**ஜெபம்:** என்மீது அன்புகூர்ந்த தேவனே, நற்கிரியைகளை செய்ய என்னை ஏற்படுத்தியவரே, இது உம்மாலே உண்டாயிற்று என்பதை நான் எப்போதும் உணர்ந்தவனாய் உமக்கு நன்றி சொல்ல உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.